ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2209 - 2021 ජනවාරි මස 01 වැනි සිකුරාදා - 2021.01.01
*2209 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாணசபை

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 2 |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | 7 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2021, சனவரி மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, சனவரி மாதம் 08 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1- B82092 - 5,403 (2021/01)

# மாகாண சபை அறிவித்தல்கள்

## மேல் மாகாண மாகாண சபை

*1989 ஆம்ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (விளைவாந்தன்மையான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய மயானபூமி மற்றும் நல்லடக்கம் தொடர்பான கட்டளைச் சட்டத்தின் 5 ஆவது பிரிவின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்*

*புளத்சிங்கள பிரதேச சபை அதிகார எல்லைக்குள் மயானபூமி மற்றும் நல்லடக்கம் செய்தல் தொடர்பான கட்டளைச் சட்டத்தின் 03 ஆவது பிரிவின் கீழ் உரிய அதிகாரியான புளத்சிங்கள பிரதேச சபையின் சிபாரிசின்படி, 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (விளைவாந்தன்மையான ஏற்பாடுகள்) சட்டத்தின் 02 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய மேற்படி கட்டளைச் சட்டத்தின் 5 ஆவது பிரிவின் மூலம், மேல் மாகாண கௌரவ ஆளுநர் என்ற ரீதியில் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் இங்கு உப அட்டவணையில் விபரிக்கப்பட்டள்ள காணியை பூதவுடல்அடக்கம் செய்வதற்கு அல்லது தகனம் செய்வதற்கு ஒதுக்கப்பட்ட பொது மயான பூமியாகப் பயன்படுத்த இத்தால் கட்டளையிடுகின்றேன்.*

ரொஷான் குணதிலக்க,
ஆர்.டப்.பீ & டி.ஏ.ஆர். வீ.எஸ்.வீ. யூ.எஸ்பீ.
பீ.எச்டீ. எவ்.ஐ.எம் (ஸ்ரீலங்கா) என்ட்டி.சீ. பீஎஸ்.சீ
மாஷல் ஒப் த ஸ்ரீலங்கா எயார்போஸ்,
மேல் மாகாண ஆளுநர்.

மாகாண சபைக் கட்டடத் தொகுதி,
இல. 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.
2020, திசெம்பர் 30.

1. 1946 ஆம் ஆண்டு 57 ஆம் இலக்க பொது மயானபூமி மற்றும் தனியார் மயானபூமி தொடர்பான கட்டளைச் சட்டத்தின் II ஆம் அத்தியாயத்தின் 5 (1) ஆவது பிரிவின் பிரகாரம் புஸ்செல்லே வத்துரான பதிரயாயேகொடெல்ல மயானபூமியை பிரகடனப்படுத்தல், புளத்சிங்கள பிரதேச சபை அதிகார எல்லைக்குள் ஓபல்ல கிராமத்தில் L 17/64 கொண்ட களப்பத்திரத்தின் 145 ஆம் இ.கி. திட்ட வரைபடத்தில் புஸ்செல்லே வத்துரான பதிரயாயேகொடெல்ல எனும் காணியில் காணித்துண்டு இல. 83.

### அட்டவணை

| | | |
|---|---|---|
| காணி அமைந்துள்ள பிரதேச செயலகப் பிரிவு | : | புளத்சிங்கள |
| கிராம அலுவலர் பிரிவு | : | 813 A மேல் நாரகல |
| கிராமம் | : | ஓபல்ல |
| காணியின் பெயர் | : | புஸ்செல்லே வத்துரான பதிரயாயேகொடெல்ல |

எல்லைகள்

| | | |
|---|---|---|
| வடக்கு | : | பிரவேசிப்பதற்காகவுள்ள பாதுகாக்கப்பட்ட காணி மற்றும் துண்டு இல. 163 |
| கிழக்கு | : | துண்டு இல. 170; |
| தெற்கு | : | துண்டு இல. 164 மற்றும் பிரவேசிப்பதற்காகவுள்ள பாதுகாக்கப்பட்ட காணி; |
| மேற்கு | : | T. P. 296911 இற்கு எல்லைகளாகவுள்ள 01 ஏக்கர் அளவைக் கொண்ட காணி. |

2. புளத்சிங்கள பிரதேச சபை அதிகார எல்லைக்குள் ஹொபவக்க கிராமத்தில் L 22/8 கொண்ட களப்பத்திரத்தின் 148 ஆம் இ.கி. திட்ட வரைபடத்தில் ருக்வல்முலுகந்த முகலான எனும் காணியில் காணித்துண்டு இல. 83.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| காணி அமைந்துள்ள பிரதேச செயலகப் பிரிவு | : | புளத்சிங்கள |
| கிராம அலுவலர் பிரிவு | : | 813 C மேல் நாரகல தெற்கு |
| கிராமம் | : | கொபவக்க |
| காணியின் பெயர் | : | ருக்வல்முலு கந்தமுகலான |

எல்லைகள்

வடக்கு : T. P. 298935 மற்றும் T. P. 277437 ஐக் கொண்ட உரித்துடைய திட்ட வரைபடங்களின் காணிகள்;
கிழக்கு : T. P. 278923 ஐக் கொண்ட உரித்துடைய திட்ட வரைபடம் மற்றும் துண்டு இல. 96 ;
தெற்கு : துண்டு இல. 82 மற்றும் 308262 ஐக் கொண்ட உரித்துடைய திட்ட வரைபடத்தின் காணி;
மேற்கு : பாதைக்காகவுள்ள பாதுகாக்கப்பட்ட காணி எல்லைகளாகவுள்ள 02 ஏக்கர் 0ரூட் 13 பேர்ச் விஸ்தீரணமுடைய காணி.

3. புளத்சிங்கள பிரதேச சபை அதிகார எல்லைக்குள் ரெடியெலே கிராமத்தில் இலக்கம் 01 ஐக் கொண்ட களப்பத்திரத்தின் 141 ஆம் இ.கி. திட்ட வரைபடத்தில் அலிகாஹேன எனும் காணியில் காணித்துண்டு இல. 273.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| காணி அமைந்துள்ள பிரதேச செயலகப் பிரிவு | : | புளத்சிங்கள |
| கிராம அலுவலர் பிரிவு | : | 814 A ரெடியெல |
| கிராமம் | : | ரெடியெல |
| காணியின் பெயர் | : | அலிகாஹேன |

எல்லைகள்

வடக்கு : துண்டு இல. 270 மற்றும் 272 ;
கிழக்கு : பாதை நெடுகேவுள்ள பாதுகாக்கப்பட்ட காணி;
தெற்கு : துண்டு இல. 339;
மேற்கு : துண்டு இல. 338, 269 மற்றும் 270 ஐக் கொண்ட காணித்துண்டுகளுக்கு எல்லைகளாகவுள்ள 0 ஏக்கர் 2ரூட் 24 பேர்ச் விஸ்தீரணமுடைய காணி.

4. புளத்சிங்கள பிரதேச சபை அதிகார எல்லைக்குள் தியகடுவ கிராமத்தில் இலக்கம் 03 ஐக் கொண்ட களப்பத்திரத்தின் 136 ஆம் இ.கி. திட்ட வரைபடத்தில் கலுவலகொடெல்ல எனும் காணியில் காணித்துண்டு இல. 366 மற்றும் 370.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| காணி அமைந்துள்ள பிரதேச செயலகப் பிரிவு | : | புளத்சிங்கள |
| கிராம அலுவலர் பிரிவு | : | 820 தியகடுவ கிழக்கு |
| கிராமம் | : | தியகடுவ |
| காணியின் பெயர் | : | கலுவலகொடெல்ல |

எல்லைகள்

வடக்கு : துண்டு இல. 202 ;
கிழக்கு : துண்டு இல. 202 மற்றும் 201;
தெற்கு : துண்டு இல. 201 மற்றும் 198 ;
மேற்கு : துண்டு இல. 365 மற்றும் பாதை
எல்லைகளாகவுள்ள 0 ஏக்கர் 3 ரூட் 13 பேர்ச் விஸ்தீரணமுடைய காணி.

5. புளத்சிங்கள பிரதேச சபை அதிகார எல்லைக்குள் தியகடுவ கிராமத்தில் இலக்கம் 03 ஐக் கொண்ட களப்பத்திரத்தின் 136 ஆம் இ.கி. திட்ட வரைபடத்தில் கபரகலகந்தேகெலே எனும் காணியில் காணித்துண்டு இல. 362.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| காணி அமைந்துள்ள பிரதேச செயலகப் பிரிவு | : | புளத்சிங்கள |
| கிராம அலுவலர் பிரிவு | : | 820A தியகடுவ கிழக்கு |
| கிராமம் | : | தியகடுவ |
| காணியின் பெயர் | : | கபரகலகந்தேகெலே |

எல்லைகள்

வடக்கு : பொது வீதி நெடுகே ஒதுக்கப்பட்டுள்ள காணி ;
கிழக்கு : துண்டு இல. 363;
தெற்கு : துண்டு இல. 149 E ;
மேற்கு : துண்டு இல. 149 எல்லைகளாகவுள்ள 0 ஏக்கர் 3 ரூட் 06 பேர்ச் விஸ்தீரணமுடைய காணி.

6. புளத்சிங்கள பிரதேச சபை அதிகார எல்லைக்குள் கோவின் கிராமத்தில் இலக்கம் L 22/16 ஐக் கொண்ட களப்பத்திரத்தின் 467 ஆம் ஆரம்ப திட்ட வரைபடத்தில் மஹயாய எனும் காணியில் காணித்துண்டு இல. 02.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| காணி அமைந்துள்ள பிரதேச செயலகப் பிரிவு | : | புளத்சிங்கள |
| கிராம அலுவலர் பிரிவு | : | 814 கோவின் தெற்கு |
| கிராமம் | : | கோவின்ன |
| காணியின் பெயர் | : | மஹயாய |

எல்லைகள்

வடக்கு : வீதி நெடுகே பாதுகாக்கப்பட்ட காணி, இலங்கை அரசாங்கத்திற்கு சொந்தமாக மஹயாய (காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் டபிள்யூ. பாரோன் பெரேரவுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. அனுமதிப்பத்திர இலக்கம் இல்லை);
கிழக்கு : இலங்கை அரசாங்கத்திற்கு சொந்தமாக மஹயாய (காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் டபிள்யூ. லெயாஸ் சிஞ்ஞோவுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது அனுமதிப்பத்திர இலக்கம் இல்லை);
தெற்கு : இலங்கை அரசாங்கத்திற்கு சொந்தமாக மஹயாய (காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் எல். எல். கரோலிசுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது அனுமதிப்பத்திர இலக்கம் இல்லை) ;
மேற்கு : இலங்கை அரசாங்கத்திற்கு சொந்தமாக மஹயாய (காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் எம். பொடியப்புவுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது அனுமதிப்பத்திர இலக்கம் இல்லை) மற்றும் இலங்கை அரசாங்கத்திற்கு சொந்தமாக மஹயாய (காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் டீ. பி. கலங்சூரியவுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது அனுமதிப்பத்திர இலக்கம் இல்லை) எல்லைகளாகவுள்ள 1 ஏக்கர் 33.6 ரூட் 0 பேர்ச் அளவைக் கொண்ட காணி.

7. புளத்சிங்கள பிரதேச சபை அதிகார எல்லைக்குள் புளத்சிங்கள கிராமத்தில் இலக்கம் 02 ஐக் கொண்ட களப்பத்திரத்தின் 140 ஆம் திட்ட வரைபடத்தில் திப்பொற்றா கெலே எனும் காணியில் காணித்துண்டு இல. 699.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| காணி அமைந்துள்ள பிரதேச செயலகப் பிரிவு | : | புளத்சிங்கள |
| கிராம அலுவலர் பிரிவு | : | 824 F கரல்தெக்ம |
| கிராமம் | : | புளத்சிங்கள |
| காணியின் பெயர் | : | திப்பொற்றாகெலே |

எல்லைகள்

அனைத்து எல்லைகளுக்காகவும் துண்டு இல. 700 எல்லைகளாகவுள்ள 3 ரூட் 39 பேர்ச் விஸ்தீரணமுடைய காணி.

8. புளத்சிங்கள பிரதேச சபை அதிகார எல்லைக்குள் நாரகல கிராமத்தில் இலக்கம் L 22/7 ஐக் கொண்ட களப்பத்திரத்தின் 143 ஆம் திட்ட வரைபடத்தில் தியபொரஎல்லே கந்த எனும் காணியில் காணித்துண்டு இல. 77A.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| காணி அமைந்துள்ள பிரதேச செயலகப் பிரிவு | : | புளத்சிங்கள |
| கிராம அலுவலர் பிரிவு | : | 812 கீழ் நாரகல |
| கிராமம் | : | கீழ் நாரகல |
| காணியின் பெயர் | : | தியபொரஎல்லே கந்த |

எல்லைகள்

வடக்கு : துண்டு இல. 282 மற்றும் 281 ;
கிழக்கு : துண்டு இல. 281;
தெற்கு : துண்டு இல. 283 ;
மேற்கு : துண்டு இல. 282 ஐக் கொண்ட காணித்துண்டு எல்லைகளாகவுள்ள 0 ஏக்கர் 3 ரூட் 01 பேர்ச் விஸ்தீரணமுடைய காணி.

9. புளத்சிங்கள பிரதேச சபை அதிகார எல்லைக்குள் குடலிகம கிராமத்தில் இலக்கம் L 23/49 ஐக் கொண்ட களப்பத்திரத்தின் 139 ஆம் திட்ட வரைபடத்தில் தென்னபிடஹேன எனும் காணியில் காணித்துண்டு இல. 189A.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| காணி அமைந்துள்ள பிரதேச செயலகப் பிரிவு | : | புளத்சிங்கள |
| கிராம அலுவலர் பிரிவு | : | 817A கீழ் குடலிகம |
| கிராமம் | : | குடலிகம |
| காணியின் பெயர் | : | தென்னபிடஹேன |

எல்லைகள்

வடக்கு : 294328 மற்றும் 288293 ஐக் கொண்ட உரித்துடைய திட்ட வரைபடங்களின் காணிகள்;
கிழக்கு : 288293 ஐக் கொண்ட உரித்துடைய திட்ட வரைபடத்தின் காணி மற்றும் துண்டு இல. 189;
தெற்கு : துண்டு இல. 189 மற்றும் 348099 ஐக் கொண்ட உரித்துடைய திட்ட வரைபடத்தின் காணி ;
மேற்கு : 348099 மற்றும் 294328 ஐக் கொண்ட உரித்துடைய திட்ட வரைபடங்களின் காணிகள் எல்லைகளாகவுள்ள 01 ஏக்கர் 3 ரூட் 34 பேர்ச் விஸ்தீரணமுடைய காணி.

10. புளத்சிங்கள பிரதேச சபை அதிகார எல்லைக்குள் மேல் நாரகல கிராமத்தில் இலக்கம் 3 ஐக் கொண்ட களப்பத்திரத்தின் 144 ஆம் இ.கி. திட்ட வரைபடத்தில் இத்தகல கந்த எனும் காணியில் காணித்துண்டு இல. 304.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| காணி அமைந்துள்ள பிரதேச செயலகப் பிரிவு | : | புளத்சிங்கள |
| கிராம அலுவலர் பிரிவு | : | 813 மேல் நாரகல |
| கிராமம் | : | மேல் நாரகல |
| காணியின் பெயர் | : | இத்தகல கந்த |

எல்லைகள்

வடக்கு : துண்டு இல. 253;
கிழக்கு : துண்டு இல. 298;
தெற்கு : உட்பிரவேசிக்கும் பாதைக்கான பாதுகாக்கப்பட்ட காணி;
மேற்கு : துண்டு இல. 253 1/2 மற்றும் உட்பிரவேசிக்கும் பாதைக்கு எல்லைகளாகவுள்ள 0 ஏக்கர் 3 ரூட் 04 பேர்ச் விஸ்தீரணமுடைய காணி.

11. புளத்சிங்கள பிரதேச சபை அதிகார எல்லைக்குள் மஹகம வடக்கு கிராமத்தில் இலக்கம் 01 ஐக் கொண்ட களப்பத்திரத்தின் 135 ஆம் இ.கி. திட்ட வரைபடத்தில் லுணுகொட்டு கந்த எனும் காணியில் காணித்துண்டு இல. 468.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| காணி அமைந்துள்ள பிரதேச செயலகப் பிரிவு | : | புளத்சிங்கள |
| கிராம அலுவலர் பிரிவு | : | 813 E தெமொதர வத்த |
| கிராமம் | : | மஹகம வடக்கு |
| காணியின் பெயர் | : | லுணுகொட்டு கந்த |

எல்லைகள்

வடக்கு : துண்டு இல. 467;
கிழக்கு : துண்டு இல. 467;
தெற்கு : துண்டு இல. 467;
மேற்கு : பாதை எல்லைகளாகவுள்ள 01 ஏக்கர் 0 ரூட் 0 பேர்ச் விஸ்தீரணமுடைய காணி.

12. புளத்சிங்கள பிரதேச சபை அதிகார எல்லைக்குள் மஹகம தெற்கு கிராமத்தில் இலக்கம் 05 ஐக் கொண்ட களப்பத்திரத்தின் 134 ஆம் திட்ட வரைபடத்தில் துனுகஸ்தெனியேகெலே எனும் காணியில் காணித்துண்டு இல. 681.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| காணி அமைந்துள்ள பிரதேச செயலகப் பிரிவு | : | புளத்சிங்கள |
| கிராம அலுவலர் பிரிவு | : | 819 C பொலேகொட மேற்கு |
| கிராமம் | : | மஹகம தெற்கு |
| காணியின் பெயர் | : | துனுகஸ்தெனியேகெலே |

எல்லைகள்

வடக்கு : மஹகம வடக்கு கிராம எல்லை மற்றும் T. P. 289458;
கிழக்கு : துண்டு இல. 682;
தெற்கு : துண்டு இல. 682;
மேற்கு : துண்டு இல. 02 எல்லைகளாகவுள்ள 01 ஏக்கர் 0 ரூட் 02 பேர்ச் விஸ்தீரணமுடைய காணி.

13. புளத்சிங்கள பிரதேச சபை அதிகார எல்லைக்குள் ஹல்வதுர கிராமத்தில் இலக்கம் 18/51, 52, 55 ஐக் கொண்ட களப்பத்திரத்தின் A 2183 ஆம் இ.கி. திட்ட வரைபடத்தில் தும்மலஹேன எனும் காணியில் காணித்துண்டு இல. 87.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| காணி அமைந்துள்ள பிரதேச செயலகப் பிரிவு | : | புளத்சிங்கள |
| கிராம அலுவலர் பிரிவு | : | 822 ஹல்வதுர |
| கிராமம் | : | ஹல்வதுர |
| காணியின் பெயர் | : | தும்மலஹேன |

எல்லைகள்

வடக்கு : வரையறுக்கப்பட்ட அங்கலோ - அமெரிகன் டிரெக்ட் டிரேடின் கம்பனி மூலம் உரிமை கோரும் ஹல்வதுர தோட்டம்;
கிழக்கு : துண்டு இல. 30;
தெற்கு : உட்பிரவேசிக்கும் பாதைக்குரிய பாதுகாக்கப்பட்ட காணி மற்றும் துண்டு இல. 88;
மேற்கு : துண்டு இல. 28 எல்லைகளாகவுள்ள 01 ஏக்கர் 0 ரூட் 03 பேர்ச் விஸ்தீரணமுடைய காணி.

01-373

# பதவிகள் - வெற்றிடம்

## மேல் மாகாணம்

## மேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

### மேல் மாகாணசபை பாடசாலைகளில் நிலவும் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல ஆசிரிய வெற்றிடங்களுக்கு கல்வியியற் பட்டதாரிகளை இலங்கை ஆசிரிய சேவையின் வகுப்பு 2 தரம் II இற்கு இணைத்துக் கொள்ளல் - 2021

*மேல் மாகாணசபைப் பாடசாலைகளில் நிலவும் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல ஆசிரியர் வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரிய சேவையின் வகுப்பு 2 தரம் II இற்கு கல்வியியற் பட்டதாரிகளை இணைத்துக் கொள்ளுவதற்காக தகுதிகளையுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2021.02.01 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "செயலாளர், ஆட்சேர்ப்புக்கிளை, மேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு, இலக்கம் 628, 10 ஆவது மாடி, ஜனஜய சிட்டி கட்டிடம் நாவல வீதி, இராஜகிரிய" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். மேலும் விண்ணப்பத்தின் தலைப்பினை சிங்கள மொழி விண்ணப்பங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ்மொழி விண்ணப்பங்களில் தமிழிற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுவது அவசியமாகும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "மேல் மாகாண சபை பாடசாலைகளில் நிலவும் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல ஆசிரிய வெற்றிடங்களுக்காக கல்வியியற் பட்டதாரிகளை இணைத்துக் கொள்ளல் - 2021" என விண்ணப்பிக்கும் பாடம் மற்றும் மொழி மூலத்தினை கட்டாயம் குறிப்பிடல் வேண்டும்.*

*(உதா. "மேல் மாகாண சபை பாடசாலைகளில் நிலவும் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல ஆசிரிய வெற்றிடங்களுக்காக கல்வியியற் பட்டதாரிகளை இணைத்துக் கொள்ளல் - 2021" - புவியியல் விஞ்ஞானம் - சிங்கள மொழி மூலம்.)*

***குறிப்பு 1.***- *விண்ணப்பமோ அது தொடர்பான ஆவணமோ தபாலில் தொலைந்ததாக அல்லது தாமதமானதாக செய்யப்படும் முறைப்பாடுகள் கருத்திற் கொள்ளப்படாது. இறுதித்தினம் வரை தாமதிப்பதனால் ஏற்படக்கூடிய விளைவுகளுக்கு விண்ணப்பதாரிகளே பொறுப்பாவர். விண்ணப்பம் கிடைத்ததாக அறிவிக்கப்படாது.*

***02. ஆட்சேர்ப்பு முறை :***

*2.1 விண்ணப்பதாரிகள் இவ்வறிவித்தலின் 5.1 இல் குறிப்பிடப்பட்ட தகைமைகளுடன் 5.2 மற்றும் 5.3 இல் குறிப்பிட்டுள்ளபடி தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளாரா என பரீட்சிப்பதற்காக பொதுவான நேர்முகத்தேர்விற்குத் தோற்றுதல் வேண்டும். இங்கு குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரிகள் பொதுவான நேர்முகத்தேர்விலேயே நிராகரிக்கப்படுவர்.*

*2.2 பொதுவான நேர்முகத்தேர்வில் தகுதி பெறும் விண்ணப்பதாரிகள் தொழிலுக்கு முக்கியமான கற்றல் கற்பித்தல் தொடர்பான திறமையினை அளவிடுவதற்காக இவ்வர்த்தமானி அறிவித்தலின் 9.2 பிரிவிற்கமைய செயன்முறைப் பரீட்சையொன்றுக்கு உட்படுத்தப்படுவர். விண்ணப்பதாரி செயன்முறைப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் முன்னுரிமை அடிப்படையில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கேற்ப நியமனங்கள் வழங்கப்படும்.*

*2.3 இவ்வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு செய்தல் மாகாண அடிப்படையில் என்பதுடன் விண்ணப்பிக்கக்கூடிய தற்போது நிலவும் வெற்றிடங்கள் மற்றும் மொழி மூலங்கள் தொடர்பான விபரங்கள் கீழுள்ளவாறாகும்.*

| தொடர் இல. | பாடங்கள் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் |
|---|---|---|---|---|
| 1. | ஆரம்பக் கல்வி | ✓ | ✓ | |
| 2. | கணிதம் | ✓ | ✓ | |
| 3. | விஞ்ஞானம் | ✓ | ✓ | |
| 4. | சிங்கள மொழி | ✓ | | |
| 5. | ஆங்கில மொழி | | | ✓ |
| 6. | தமிழ் மொழி | | ✓ | |
| 7. | பௌத்த சமயம் | ✓ | | |
| 8. | இஸ்லாம் சமயம் | ✓ | ✓ | |
| 9. | கத்தோலிக்க சமயம் | ✓ | ✓ | |
| 10. | இந்து கலாச்சாரம் | | ✓ | |
| 11. | புவியியல் | ✓ | ✓ | |
| 12. | அரசியல் விஞ்ஞானம் | ✓ | ✓ | |
| 13. | தகவல் தொழில்நுட்பம் | ✓ | ✓ | |
| 14. | வரலாறு | ✓ | ✓ | |
| 15. | நாடகம் மற்றும் நடிப்புக்கலை | ✓ | ✓ | |
| 16. | குடியுரிமைக் கல்வி | ✓ | ✓ | |
| 17. | விசேட கல்வி | ✓ | ✓ | |

**03. சேவை நிபந்தனைகள் :**

(i) இந்நியமனம் நிரந்தரமானது. பதவிக்குரிய ஓய்வூதியக் கொடுப்பனவு தொடர்பாக அரசினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு நீர் கீழ்ப்படிதல் வேண்டும்.

(ii) பதவியுயர்வுகள் மேல் மாகாண ஆசிரியர் சேவைப்பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்படும்.

(iii) விண்ணப்பதாரிகள் தமது பட்டப்படிப்பிற்குரிய விடயங்களின் கீழ் விண்ணப்பிப்பதுடன், நியமனம் வழங்கப்படும் பாடம் எந்தவொரு காரணத்திற்காகவும் மாற்றப்படமாட்டாது.

மேல் மாகாண கௌரவ ஆளுநரினால் 2017.06.20 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட மேல் மாகாண ஆசிரியர் சேவைப்பிரமாணக் குறிப்பு மற்றும் அதற்கு இதன்பின்னர் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும் அரச சேவையின் நியமனங்களுக்குரிய பொது நிபந்தனைகளுக்கும் இந்நியமனம் உட்பட்டதாகும்.

**04. சம்பள அளவுத்திட்டம்:**

இப்பதவிக்கு அரச நிருவாக சுற்று நிருபம் 03/2016 இன் படி சம்பள அளவு (G.E. - 02- 2016) இன் ரூபா 33,300 - 495 x 5 - 680 x 5 - 825 x 7- 1,335 x 20 ரூபா 71,650 (மாதாந்த) சம்பளம் உரித்துடையதாகும். அவர்கள் இச்சம்பள அளவுத்திட்டத்தின் 3 ஆம் படியாகிய ரூபா. 34,290.00 இல் நியமிக்கப்படுவர். இதற்கு மேலதிகமாக அரச அலுவலர்களுக்க அரசினால் காலத்திற்குக் காலம் வழங்கப்படும் வேறு கொடுப்பனவுகளும் உமக்குரித்தாகும்.

**05. கல்வித் தகைமைகள் :**

மேல் மாகாண ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு அமைவாக கீழ்க் குறிப்பிடப்படும் தகுதிகளைப் பூர்த்தி செய்திருத்தல் அவசியம்.

5.1 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் அல்லது பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனமொன்றில் பெற்றுக் கொண்ட கல்வியியல் பட்டம்

மற்றும்

5.2 இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு அமைவாக கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத முறையில் தாய்மொழி மற்றும் கணித பாடங்கள் உட்பட 06 பாடங்களில் மூன்று திறமைச் சித்திகளுடன் சித்தியடைந்திருத்தல் (ஒரே தடவையில் ஆகக்குறைந்தது 05 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.)

மற்றும்

5.3 கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

**06. வயதெல்லை :**

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்தன்றுவயது 18 வருடங்களுக்குக் குறையாமல் 35 வருடங்களுக்கு மேற்படாமல் இருத்தல். மேல் மாகாண அரச சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் தகுதிகளையுடைய பட்டதாரிகளுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.
(அதற்கேற்ப 2003.02.01 ஆந் திகதியில் அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1986.02.01 ஆந் திகதியில் அல்லது அதற்குப் பின்னர் பிறந்தவர்கள் மாத்திரமே இதற்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்)

**07. ஏனைய தகுதிகள் :**

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
(ii) சிறந்த நடத்தையுடையவராயிருத்தல்
(iii) மேல் மாகாணத்தின் எப்பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றவதற்கும் போதுமான நல்ல உடல் மற்றும் உள ஆரோக்கியத்தை கொண்டிருத்தல்
(iv) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு முன்னரான 03 வருடங்கள் மேல்மாகாணத்தில் நிரந்தரமாக தொடர்ந்து வசிப்பவராயிருத்தல்

அல்லது

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்தில் விண்ணப்பதாரி மேல் மாகாணத்தில் நிரந்தர வசிப்பாளராகவும் அவரது வாழ்க்கைத்துணையும் அதற்கு முன்னரான 03 வருடங்கள் மேல் மாகாணத்தில் நிரந்தரமாக தொடர்ந்து வசிப்பவராகவுமிருத்தல்
(v) இவ்வறிவித்தலில் குறிப்பிட்டுள்ள விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்தில், இப்பதவிக்கு இணைத்துக் கொள்வதற்கு அவசியமான அனைத்து தகுதிகளையும் பூர்த்தி செய்திருத்தல்.

**08. விண்ணப்பிக்கும் முறை :**

8.1 விண்ணப்பத்தினை இவ் அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு ஏற்ப A4 அளவிலான ஒரு தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரித்தல் வேண்டும். இலக்கம் 1.0 தொடக்கம் 4.2 வரையான தலைப்புகள் முதல் பக்கத்திலும் இலக்கம் 5.0 தொடக்கம் உள்ள பகுதிகள் இரண்டாம் பக்கத்திலும் அமையுமாறு விண்ணப்பத்தினைத் தயாரித்தல் வேண்டும். உரிய மாதிரியுடன் பொருந்தாத விண்ணப்பங்கள் மற்றும் பூர்த்தியற்ற தகவல்களைக் கொண்ட விண்ணப்பங்கள் அறிவித்தல்கள் ஏதுமின்றி நிராகரிக்கப்படும். (விண்ணப்பத்தின் நிழற் பிரதியொன்றை வைத்திருத்தல் பயனுடையதாகும்). விண்ணப்பம் உரிய மாதிரியுடன் பொருந்துகிறதா என விண்ணப்பதாரி சரிபார்த்தல் அவசியம். அவ்வாறில்லையாயின் விண்ணப்பம் நிராகரிக்கப் படலாம்.

8.2 ஒரு விண்ணப்பதாரி ஒரு விண்ணப்பத்தை மாத்திரமே சமர்ப்பிக்கலாம்.

8.3 விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். நிறுவனமொன்றின் விண்ணப்பதாரியின் கையொப்பமானது நிறுவனத் தலைவரினால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட

அலுவலரினாலும் ஏனைய விண்ணப்பதாரிகளது கையொப்பமானது அரச பாடசாலையொன்றின் அதிபர், பிரதேச கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையின் அதிகாரி அதிகாரமுள்ள அலுவலர், பொலிஸ் சேவையின் வர்த்தமானிப்படுத்தப்பட்ட பதவியொன்றை வகிக்கும் அலுவலர் (ரூ.498,960.00 இற்கு மேலான வருடாந்த அடிப்படைச் சம்பளம் பெறும் அரச/மாகாண அரச சேவையில் நிரந்தர பதவி நிலை அலுவலர், பௌத்த விகாரையொன்றின் விகாராதிபதி, கருதத்தக்க அளவிலான நிலையிலிருக்கும் ஒரு மதகுரு ஆகியோரில் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

8.4 நீங்கள் விண்ணப்பிக்கும் பாடம் மற்றும் மொழிமூலம் பின்னர் ஒரு போதும் மாற்றப்பட மாட்டாது. அது தொடர்பாக செய்யப்படும் முறைப்பாடுகள் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.
(நீங்கள் விண்ணப்பிக்கும் பாடம் மற்றும் மொழி மூலத்தினை அடிப்படையாகக் கொண்டே நேர்முகத் தேர்வு மற்றும் நியமனம் வழங்கப்படுவதால் விண்ணப்பிக்கும் போது அது தொடர்பில் கவனம் செலுத்துமாறும் பின்னர் ஒரு போதும் அது மாற்றப்படமாட்டாது எனவும் அறியத் தருகிறோம்)

8.5 உரிய மாதிரியுடன் பொருந்தாத விண்ணப்பங்கள் மற்றும் பூர்த்தியற்ற தகவல்களைக் கொண்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**09. நேர்முகத்தேர்வு :**

9.1 பொதுவான நேர்முகத்தேர்வு

பொதுவான நேர்முகத்தேர்விற்குப் புள்ளிகள் எதுவும் வழங்கப்படாது

***குறிப்பு 02.-*** அடைய எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள்
சேவைப்பிரமாணக் குறிப்பின்படி பிரசுரிக்கப்படும் இவ்வறிவித்தலில் அல்லது பத்திரிகை விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளாரா என பரீட்சித்தல் மற்றும் உடல் தகுதியினைப் பரீட்சித்தல்.

9.2 செயன்முறைப் பரீட்சை :
செயன்முறைப் பரீட்சையாக விண்ணப்பதாரி தன்னால் இனங்காணப்படும் ஒரு தலைப்பின் கீழ் செயல் முறை முன்வைப்பு ஒன்றை மேற்கொள்ளல் வேண்டும் அதற்கு பின்வருமாறு புள்ளிகள் உரித்தாகும்.

| தொடர் இல. | செயன்முறைப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும் நியமங்கள் | உச்ச புள்ளிகள் | சித்தியடைவதற்குத் தேவையான ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|---|
| 01 | குறிக்கோள் மற்றும் பிரவேசம் | 05 | 02 |
| 02 | ஆளுமை மற்றும் குரல் கட்டுப்பாடு | 05 | 02 |
| 03 | தொடர்பாடல் தெளிவு | 05 | 02 |
| 04 | நேர முகாமைத்துவம் | 05 | 02 |
| 05 | முன்வைத்தல் நுட்பமுறைகளின் பயன்பாடு | 05 | 02 |
| | மொத்தப் புள்ளிகள் | 25 | |

***குறிப்பு 03*** - அடைய எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள்
ஆசிரியத் தொழிலில் முக்கியமான கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் விண்ணப்பதாரரின் திறன்களை அளவிடுதல்.

9.2.1 செயன்முறைப் பரீட்சை முறை

(i) செயன் முறைப் பரீட்சைக்காக 05 நிமிடங்களுக்குக் குறையாத காலம் வழங்கப்படும்.
(ii) செயன் முறைப்பரீட்சையில் பெற்றுக் கொள்ளக்கூடிய அதிகூடிய புள்ளிகள் 25 ஆகும்.
(iii) செயன்முறைப்பரீட்சையில் சித்தியடைவதற்காக ஒவ்வொரு நியமங்கள் தொடர்பாகவும் ஆகக்குறைந்தது 02 புள்ளிகள் வீதம் பெறல் அவசியம்.
(iv) செயன்முறைப்பரீட்சை மதிப்பீடு மேல் மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகத் தேர்வுக் குழுவொன்றினால் மேற்கொள்ளப்படும்.

9.2.2 நியமங்களின் குறிக்கோள்கள் :

(i) குறிக்கோள் மற்றும் பிரவேசம்
வெற்றிகரமாக பாடத்தின் நோக்கத்தினை விளக்குதல் மற்றும் பாடப் பிரவேசம் செய்யும் திறமையினை மதிப்பிடல்

(ii) ஆளுமை மற்றும் குரல் கட்டுப்பாடு
ஒரு ஆசிரியராக சிறந்த ஆளுமையுடன் காணப்படல் மற்றும் கற்பித்தலில் சிறப்பாக குரலினை கட்டுப் படுத்துவதில் உள்ள திறமையினை மதிப்பிடல்

(iii) தொடர்பாடல் தெளிவு
கற்றல் கற்பித்தல் நடவடிக்கையில் உரிய விடயங்கள் உற்பத்தித் திறனுள்ள முறையில் தெரிவிக்கும் திறமையினை மதிப்பிடல்

(iv) நேர முகாமைத்துவம்
வழங்கப்படும் காலப்பகுதியினுள் நோக்கத்தினை அடைந்து கொள்ளும் திறமையினை மதிப்பிடல்

(v) முன்வைத்தல் நுட்பமுறைகளின் பயன்பாடு
நோக்கத்தினை அடைந்து கொள்வதற்காக முன்வைத்தல் நுட்பமுறைகளை சிறப்பாகப் பயன்படுத்தும் திறமையினை மதிப்பிடல்

**10. விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்வதற்கான அறிவுரைகள் :**

விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்வதில் கீழுள்ள அட்டவணை மற்றும் 2.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை பயன்படுத்தவும்.

அட்டவணை

| மொழி மூலம் | குறியீட்டு இலக்கம் |
|---|---|
| சிங்கள மொழி மூலம் | 1 |
| தமிழ் மொழி மூலம் | 2 |
| ஆங்கில மொழி மூலம் | 3 |

11. தற்போது அரச சேவையிலுள்ள அலுவலர்கள் விண்ணப்பத்தின் 8.0 ஆம் தலைப்பின் **கீழ் தமது திணைக்களப் பிரதானியினால்** அத்தாட்சிப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தினை சமர்ப்பித்தல் கட்டாயமானதாகும்.

12. நேர்முகத் தேர்விற்காக குறிப்பிட்ட தினத்தில் சமுகமளிக்காத விண்ணப்பதாரிகள் தொடர்பாக **எவ்விதத்திலும் மீள் பரிசீலனை செய்யப்படாது**.

13. அவ்வாறே நேர்முகத் தேர்வு தினத்தில் அனைத்து சான்றிதழ்களும் சமர்ப்பிக்கப்படல் அவசியம். **பின்னர் சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு சான்றிதழும் ஏற்றுக் கொள்ளப்படாது**.

14. இவ்வறிவித்தலில் உள்ளடக்கப்படாத ஏதேனுமொரு விடயம் இருப்பின் அது தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளும் உரிமையும், ஏதேனும் வெற்றிடங்களின் பகுதியொன்றை அல்லது அனைத்தையும் நிரப்புதல் அல்லது நிரப்பாமல் விடுதல் தொடர்பாக இறுதித் தீர்மானம் மேற்கொள்ளும் உரிமையும் மேல் மாகாண அரச சேவை ஆணைக் குழுவிற்குரியதாகும்.

15. இவ்வறிவித்தலின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையில் ஏதும் வேறுபாடுகள் ஏற்படின் சிங்கள மொழியிலான அறிவித்தல் சரியானதெனக் கருதப்படும்.

திலக் செனரத்,
செயலாளர்,
மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு,
மேல் மாகாணம்.

2020.12.18.

மாதிரி விண்ணப்பப்படிவம் [ ]

(அலுவலக உபயோகத்திற்காக)

**மேல் மாகாண சபை பாடசாலைகளில் நிலவும் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல ஆசிரியர் வெற்றிடங்களுக்கு கல்வியியற் பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவையின் வகுப்பு 2 தரம் II இற்கு இணைத்துக் கொள்ளல் - 2021**

**Recruitment of Bachelor of Education Graduates to Grade II of Class 2 of the Sri Lanka Teachers' Service for Sinhala, Tamil and English Medium, Vacancies existing in Western Provincial Schools - 2021**

1.0. வெற்றிடத்திற்காக விண்ணப்பிக்கும் மொழி மூலம் தொடர்பான அட்டவணையினைப் பயன்படுத்தி குறியீட்டு இலக்கத்தினைக் குறிப்பிடவும்.

மொழி மூலம் [ ]

2.0 விண்ணப்பிக்கும் பாடம் 2.3 ஆம் பந்தியில் குறிப்பிட்டவாறு (எழுத்தில்) :
.......................................................................................................................

3.0. முழுப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில் ) : (Ex : AMARAKOON MUDIYANSELAGE NAMAL HERATH )
.......................................................................................................................

3.1. முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) : (Ex : HERATH A.M. N. )
.......................................................................................................................

3.2. முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :
.......................................................................................................................

3.3 தற்போதைய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)
.......................................................................................................................

4.0. நிரந்தர வதிவிட மாவட்டம் (பொருத்தமான கூட்டில் ✓ இடவும் )

கொழும்பு [ ]
களுத்துறை [ ]
கம்பஹா [ ]

4.1. பிரதேச செயலாளர் பிரிவு :

4.2 2021.02.01 ஆந் திகதிக்கு மேல் மாகாணத்தில் நிரந்தரமாக வசிக்கும் காலம் : ..............................................

5.0. விண்ணப்பதாரி அரச சேவையில் உள்ளவராயின்,

(5.1) தற்போது வகிக்கும் பதவி : ...............................................................................

(5.2) பதவியில் நியமிக்கப்பட்ட திகதி : ...............................................................................

(5.3) தாபனத் தலைவரின் உத்தியோகபூர்வ பெயர் : ...............................................................................

(5.4) சேவையாற்றும் தாபனம் : ...............................................................................

(5.5) தாபன முகவரி : ...............................................................................

6.0 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

7.0 தொலைபேசி இலக்கம் :

நிலையான : | | | | | | | | | | |

கையடக்க : | | | | | | | | | | |

(இப்பரீட்சை தொடர்பான தகவல்கள் 'SMS' ஊடாக அனுப்பப்படுவதால் செல்லுபடியான தொலைபேசி இலக்கமொன்றைக் குறிப்பிடவும்.)

8.0 விவாக நிலை : திரு. /திருமதி/செல்வி [ ]
(கூட்டினுள் எழுத்தில் குறிப்பிடவும்)

9.0 பிறந்த தேதி :

ஆண்டு : [ ] மாதம் : [ ] திகதி [ ]

10.0 பால் (ஆண்/பெண் ): [ ]

(கூட்டினுள் எழுத்தில் குறிப்பிடவும்)

11.0 கல்வித் தகைமைகள் பற்றிய தகவல்கள் :

| க. பொ. த. (சா.த.) பரீட்சை : | | | | | | க. பொ. த. (உ.த.) பரீட்சை : | |
|---|---|---|---|---|---|---|---|
| வருடம் : | | | சுட்டிலக்கம் : | | | வருடம் : | சுட்டிலக்கம் : |
| வருடம் : | | | சுட்டிலக்கம் : | | | | |
| பாடம் | தரம் | வருடம் | பாடம் | தரம் | வருடம் | பாடம் | தரம் |
| 1. | | | 6. | | | 1. | |
| 2. | | | 7. | | | 2. | |
| 3. | | | 8. | | | 3. | |
| 4. | | | 9. | | | | |
| 5. | | | 10. | | | | |

12.0 உயர் கல்வித் தகைமை பற்றிய தகவல்கள் :

12.1 பெற்றுள்ள பட்டம் : ............................................................................................................

12.2 பல்கலைக்கழகம் : ............................................................................................................

12.3 பட்டச் சான்றிதழின் நடைமுறைத் திகதி : ..........................................................................

12.4 பட்டப்படிப்பில் பயின்ற பிரதான பாடம் /பாடங்கள் : ........................................................

12.5 பட்டம் பெற்ற மொழி மூலம் : ...........................................................................................

இங்கு குறிப்பிடப்பட்டுள் தகவல்கள் எனது அறிவு மற்றும் நம்பிக்கைக்கு ஏற்ப உண்மையானவை என தெரிவிக்கின்றேன். நான் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் தகுதியற்றவர் என அறியவருமிடத்து சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என நான் அறிவேன். இங்கு குறிப்பிடப்பட்ட எந்தவொரு தகவலையும் பின்னர் மாற்றமாட்டேன் எனவும் தெரியப்படுத்துகின்றேன்.

திகதி : ........................ ....................................................

கையொப்பம் :

13. விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல்

இவ்விண்ணப்பதாரி திரு./திருமதி/செல்வி ...................................................................... என்பவரை எனக்குத் தனிப்பட்டமுறையில் தெரியும் எனவும், அவர் .................................... ஆந் திகதி என் முன்னிலையில் ஒப்பமிட்டார் எனவும் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

................................................
கையொப்பத்தினை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி : ........................

அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப் பெயர் : ..........................................................................................

பதவி : ..............................................................................................................................

விலாசம் : ...........................................................................................................................

(உத்தியோகபூர்வ முத்திரையினை இடவும்)

14. விண்ணப்பதாரி அரச அலுவலராயின் நிறுவனத் தலைவரின் சான்றிதழ்

திரு. /திருமதி/செல்வி ............................................ விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கின்றேன். அவர் இவ்வமைச்சில்/ இத் திணைக்களத்தில் நிரந்தர/ தற்காலிக/ அமய ஊழியராக கடமையாற்றுகிறார் எனவும், இப்பதவிக்காகத் தெரிவு செய்யப்பட்டால் அவரை விடுவிக்க முடியும்/முடியாது எனவும் தெரியப்படுத்துகின்றேன்.

......................................................
திணைக்களத் தலைவர் அல்லது அவரால் அதிகாரம்
அளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்.

பதவி : ..........................................

அமைச்சு/திணைக்களம்: .......................................

திகதி : ....................................

(உத்தியோகபூர்வ முத்திரையினை இடவும்)

01-138

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2014 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே காசுக் கட்டளைகளுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரைப் பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி கிடைக்கப் பெறாமை முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகர் என்ற முகவரிக்கு அறிவியுங்கள்**

14. **2014 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்குமான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவது தொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III ஆவது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I ஆவது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III ஆவது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V ஆவது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI ஆவது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவது தொகுதி | 40.00 | 60.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III ஆவது தொகுதி | 15.00 | 60.00 |
| I ஆவது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| III ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V ஆவது பகுதி | 123.00 | 60.00 |
| VI ஆவது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.*** *– இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

**அட்டவணை - 2021**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **சனவரி** | .. | வெள்ளி | 01.01.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.12.2020 |
| | | வெள்ளி | 08.01.2021 | .. | நண்பகல் 12 | வியாழன் | 24.12.2020 |
| | | வெள்ளி | 15.01.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.01.2021 |
| | | வெள்ளி | 21.01.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.01.2021 |
| | | வெள்ளி | 29.01.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.01.2021 |
| **பெப்புருவரி** | .. | வெள்ளி | 05.02.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.01.2021 |
| | | வெள்ளி | 12.02.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.01.2021 |
| | | வெள்ளி | 19.02.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.02.2021 |
| | | வியாழன் | 25.02.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.02.2021 |
| **மாச்சு** | .. | வெள்ளி | 05.03.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.02.2021 |
| | | வெள்ளி | 12.03.2021 | .. | நண்பகல் 12 | வியாழன் | 25.02.2021 |
| | | வெள்ளி | 19.03.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.03.2021 |
| | | வெள்ளி | 26.03.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.03.2021 |

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி 01 ஆந் திகதி.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*